# Puducherry

# Regional Bulletin

25.2.2026 18.10hrs

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 25.02.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திரமோடி, இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இஸ்ரேல் சென்றடைந்தார். பிரதமருக்கு, விமான நிலையத்தில் ராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆயுஷ் அமைப்புகளான, ஆயுர்வேதம், யோகா, சித்த மருத்துவம் போன்றவை நோய்களுக்கான சிகிச்சை வழங்குவதுடன், முழுமையான சுகாதாரத்திற்கான அறிவியலாகவும் திகழ்கிறது என்று, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் தலைமையிலான, 7 பேர் கொண்ட குழு, இன்று புதுச்சேரி வந்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் நல்ல கண்ணு, உடல்நலக் குறைவு காரணமாக இன்று சென்னையில் காலமானார்.

*மோடி – இஸ்ரேல் -1 (9)*

பிரதமர் திரு. நரேந்திரமோடி, இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இஸ்ரேல் சென்றடைந்தார். இஸ்ரேல் தலைநகர், டெல்அவிவ் விமான நிலையத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடியை, அந்நாட்டு பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு நேரில் சென்று வரவேற்றார். இது, பிரதமர் திரு. மோடியின் இரண்டாவது இஸ்ரேல் பயணமாகும். இந்தப் பயணத்தின்போது, இரு நாடுகளின் தலைவர்களும், பரஸ்பர எதிர்காலத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வார்கள். பிரதமர் திரு. மோடியின் இந்தப் பயணம் குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

*மோடி – இஸ்ரேல் - 2 (15)*

(வாய்ஸ்)

தனது இஸ்ரேல் பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மையில் புதிய இலக்குகள் நிர்ணயிக்கப்படும் என்றும், நட்புறவு மேலும் வலுப்பெறும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். அறிவியல், தொழில்நுட்பம், புதுமை, பாதுகாப்பு, விவசாயம், நீர் மேலாண்மை, வர்த்தகம், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும், இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர். தனது இஸ்ரேல் பயணத்தின்போது, அந்நாட்டு அதிபர் திரு. ஐசக் ஹெர்சாக்கை சந்தித்துப் பேச உள்ளதாகவும், திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் இன்று மாலை திரு. மோடி உரையாற்றுவார் என்று இஸ்ரேலுக்கான இந்தியத் தூதர் திரு. ஜே.பி. சிங் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் இந்தியப் பிரதமர் ஒருவர் உரையாற்றுவது இதுவே முதல் முறையாகும். இதற்கிடையே, இஸ்ரேல் அதிபர் திரு. ஐசக் ஹெர்சாக், பிரதமர் திரு. நரேந்திர மோடியை வரவேற்க தனது நாடும் – மக்களும் ஆவலுடன் காத்திருப்பதாக சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

*குடியரசு தலைவர் -1 (17)*

ஆயுஷ் அமைப்புகளான, ஆயுர்வேதம், யோகா, சித்த மருத்துவம் போன்றவை நோய்களுக்கான சிகிச்சை வழங்குவதுடன், முழுமையான சுகாதாரத்திற்கான அறிவியலாகத் திகழ்கிறது என்று, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார். மகாராஷ்டிர மாநிலம், புல்தானா மாவட்டத்தில் உள்ள ஷெகானில், ஆயுஷ் அமைச்சகமும் – அகில இந்திய ஆயுர்வேத இயக்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, நான்கு நாள் தேசிய ஆரோக்கிய கண்காட்சியை இன்று அவர் தொடக்கி வைத்தார். அப்போது உரையாற்றிய குடியரசு தலைவர், ஆயுர்வேத மருத்துவம், உணவு முறை, தினசரி பழக்க வழக்கம், பருவகால மற்றும் நோய்த் தடுப்பிற்கான வழிகாட்டுதல்களை வழங்கும் அறிவியலாகத் திகழ்கிறது என்றார்.

ஆரோக்கிய வாழ்வின் முக்கியத்துவம் குறித்து, எடுத்துக் கூறிய குடியரசு தலைவர் , நோய் வந்தபின் சிகிச்சை எடுத்துக் கொள்வதைவிட – வருமுன் காப்பதே சிறப்பானது என்றார். வருமுன் காக்கும் பழக்கமானது, தனிநபருக்கு நன்மை தருவதோடு, நாட்டின் சுகாதார அமைப்புகள் மீதான சுமையை குறைக்க உதவுவதாகவும் தெரிவித்தார். இதன் காரணமாகவே, தினசரி உடற்பயிற்சிகள், சரியான உணவுமுறை மற்றும் சீரான வாழ்க்கை முறை போன்ற தடுப்பு நடவடிக்கைகள் வலியுறுத்தப்படுவதாக கூறினார்.

*குடியரசு தலைவர் - 2 (14)*

உலகெங்கிலும் உள்ள மக்கள் மன அழுத்தம் இல்லாத மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வதற்கு யோகாவை பின்பற்றுகிறார்கள் என்றும், ஆயுர்வேத சிகிச்கைகள் மற்றும் மருந்துகள் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு பயனளித்து வருவதாகவும் குடியரசு தலைவர் தெரிவித்தார்.

அனைத்து புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகளிலும், ஆயுஷ்துறைகள் நிறுவப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டில், ஆயுஷ் துறைக்கு குறிப்பிடத்தக்க நிதி ஒதுக்கியதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் மற்றும்

ஆயுஷ்துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ்விற்கும் அவர் நன்றி தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, இன்று மாலை, நாக்பூருக்கு அருகில் ஜம்தாவில் அமைந்திருக்கும் விஸ்வசாந்தி சரோவர் வளாகத்தில் பிரம்மகுமாரிகள் அமைப்பின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒற்றுமை மற்றும் நம்பிக்கையின் மூலம் மகாராஷ்டிராவிற்கு ஒரு பொற்காலம் என்ற தலைப்பிலான பிரச்சாரத்தையும் அவர் தொடக்கி வைக்கிறார்.

*கிரண் ரிஜிஜு (14)*

புதுடெல்லியில், அருணாச்சலப்பிரதேசத்தைச் சேர்ந்த 3 பெண்களை அவமதித்ததாக சொல்லப்படும் குற்றவாளியை டெல்லி காவல்துறை கைது செய்துள்ளதாக, மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று காலை செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த குற்றத்தில் ஈடுபட்டவருக்கு எதிராக சட்டத்தின்படி, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். வடகிழக்கு மாநில மக்களிடம், தவறாக நடந்து கொள்பவர்கள்மீது, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அரசு உறுதி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த சம்பவம் குறித்து, தனது கண்டனத்தை சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ள டெல்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா, வடகிழக்கு மக்களை அவமதிக்கும் அல்லது பாகுபாடு காட்டும் எந்தவொரு செயலையும் தேசிய தலைநகரில் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும், இது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

*ஞானேஷ்குமார் – புதுச்சேரி (9)*

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் தலைமையிலான, 7 பேர் கொண்ட குழு இன்று

புதுச்சேரி வந்துள்ளது. தனியார் உணவு விடுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலர், காவல் துறை இயக்குநர் மற்றும் புதுச்சேரி தேர்தல் துறை அதிகாரிகளுடன் அக்குழு ஆலோசனை மேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார், செய்தியாளர்களை சந்திக்க உள்ளதாக புதுச்சேரி தேர்தல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*நல்லகண்ணு (10)*

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் நல்ல கண்ணு, உடல்நலக் குறைவு காரணமாக இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 101. சிறுநீரக செயலிழப்பு மற்றும் நிமோனியா காய்ச்சால் காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றுவந்த அவர், சிகிச்சைப் பலனின்றி இன்று பிற்பகல் காலமானார். அவரது மறைவு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் உட்பட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்திய சுதந்திரப் போராட்டம், விவசாயிகள் போராட்டம், தீண்டாமைக்கு எதிரான போராட்டம் என தனது வாழ்நாள் முழுவதையும் ஏழை-எளிய மக்களின் நலனுக்காகவே அர்ப்பணித்தவர் தோழர் நல்லக்கண்ணு என்று தெரிவித்துள்ளார்.

*செவ்வேள் – தடுப்பூசி (9)*

புதுச்சேரியில், கர்ப்ப வாய் புற்றுநோய்க்கான தடுப்பூசி, 14 வயதுக்கு மேற்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என, சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் தெரிவித்துள்ளார். இது குறித்து, இன்று செய்தியாளர்களை சந்தித்த அவர், இந்தியா முழுவதும், பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும், கர்ப்ப வாய் புற்றுநோயை தடுக்கும் வகையிலான தடுப்பூசித் திட்டத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 28ஆம் தேதி,

இராஜஸ்தானில் நடைபெறும் விழாவில் தொடக்கி வைப்பதாகத் தெரிவித்தார். புதுச்சேரியில், 3 மாதங்களுக்கு இந்த தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் நடைபெறும் என்றும் டாக்டர் செவ்வேள் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்....

(வாய்ஸ்)

*ஜோதிடர் மாநாடு (11)*

காரைக்கால் திருநள்ளாறு ஸ்ரீதர்பாரண்யேஸ்வரர் ஆலயத்தில் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெற உள்ள சனிப்பெயர்ச்சி விழாவை முன்னிட்டு, இரண்டு நாள் ஜோதிடர் மாநாடு நடத்தப்பட உள்ளது. அதன்படி, மார்ச் மாதம் 1ஆம் தேதி தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், ஜோதிடர்கள் மற்றும் ஜோதிட அறிஞர்கள் கலந்து கொண்டு, வேத ஜோதிடத்தில், சனிப்பெயர்ச்சியின் முக்கியத்துவம், பல்வேறு ராசிகளுக்கான பலன்கள் மற்றும் கர்ம வினைகளில் சனீஸ்வர பகவானின் பங்கு போன்றவை குறித்தும் உரையாற்ற உள்ளனர். காரைக்கால் மாவட்டத்தின் ஆன்மிகச் சுற்றுலா மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை உலகறியச் செய்யும் வகையில் இந்த மாநாடு அமையும் என எதிர்பார்க்கப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*காரைக்கால் நெல் (13)*

காரைக்காலில் கிரேடு A ரக நெல் குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 389 ரூபாயும், புதுரகம் குவிண்டாலுக்கு ரூபாய் 2 ஆயிரத்து 369 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், புதுச்சேரி அரசின் முயற்சியால் காரைக்கால் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் மாத்தூர் அரசு விதைப் பண்ணை ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. நெல்லின் ஈரப்பதம் 17 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டும் என்றும், சுத்தம் செய்யப்பட்ட

நெல்லை மட்டுமே விற்பனைக்கு கொண்டு வர வேண்டும் என்றும், விவசாயிகள் தங்கள் ஆதார் அட்டை மற்றும் வங்கிப் புத்தகம் ஆகியவற்றின் நகலையும் கொண்டுவர வேண்டும் என்றும் காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

*மாஹே (10)*

மாஹே பி.எம். ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா பள்ளி சார்பில், இன்று வினாடி – வினா போட்டி நடைபெற்றது. பி.எம். ஸ்ரீ திட்டத்தின் கீழ், பிராந்திய அளவில் நடைபெற்ற இந்தப் போட்டியில், மாஹேவில் உள்ள 3 பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் உட்பட 8 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு கேந்திரிய வித்யாலயா பள்ளியின் முதல்வர் திரு. கினிஷ் குமார் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். அப்பொழுது பேசிய அவர், தேசிய கல்விக் கொள்கை 2020 மற்றும் பி.எம்.ஸ்ரீ பள்ளி முன் முயற்சி குறித்து, மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இந்த வினாடி – வினா போட்டி நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திரமோடி, இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இஸ்ரேல் சென்றடைந்தார். பிரதமருக்கு, விமான நிலையத்தில் ராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆயுஷ் அமைப்புகளான, ஆயுர்வேதம், யோகா, சித்த மருத்துவம் போன்றவை நோய்களுக்கான சிகிச்சை வழங்குவதுடன், முழுமையான சுகாதாரத்திற்கான அறிவியலாகவும் திகழ்கிறது என்று, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் தலைமையிலான, 7 பேர் கொண்ட குழு இன்று புதுச்சேரி வந்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் நல்ல கண்ணு, உடல்நலக் குறைவு காரணமாக இன்று சென்னையில் காலமானார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. BI / CN / RK